## களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## நெல்லையில் இன்று தொடங்குகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை இன்று (ஏப்ரல் 3ஆம் தேதி) திருநெல்வேலியில் தொடங்குகிறார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் கட்டமாக இன்று திருநெல்வேலியில் பரப்புரையை தொடங்குகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**03.04.2026 (வெள்ளிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| மாலை 5 மணி | **திருநெல்வேலி -** பாளையங்கோட்டை (பொதுக்கூட்டம்) | திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, நாங்குநேரி, ராதாபுரம் |

**04.04.2026 (சனிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **நாகர்கோவில்** (பொதுக்கூட்டம்) | கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் |
| மாலை 5 மணி | **சங்கரன்கோயில்** (பொதுக்கூட்டம்) | சங்கரன்கோயில், ஆலங்குளம், தென்காசி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர் |

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **விருதுநகர்** (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | **திருமங்கலம்** (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### சிறுநீர்க் கட்டுப்பாட்டுச் செயலிழப்பால் ரூ.25 லட்சம் செலவில்

# சிறுமிக்கு சிகிச்சையளித்துள்ள ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை குழுவினருக்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஏப்.3-

சிறுநீர்க் கட்டுப்பாட்டுச் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக 25 லட்சம் ரூபாய் சிகிச்சை அளித்துள்ள நம் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக் குழுவினரைப் பாராட்டுகிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

சிறுநீர்க் கட்டுப்பாட்டுச் செயலிழப்பால் பாதிக்கப்பட்ட சிறுமிக்குத் தென்னிந்தி யாவிலேயே முதல்முறையாக 25 லட்ச ரூபாய் சிகிச்சையை அளித்துள்ள நம் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக் குழுவினரைப் பாராட்டுகிறேன்!

இத்தகைய சாதனைகள் தொடர, கடைக்கோடி மக்களுக்கும் உயர்தர சிகிச்சையை உறுதிசெய்ய, அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில்,

- **மருத்துவக் காப்பீட்டுத் தொகை 10 லட்சம் ரூபாயாக உயர்வு**
- **சென்னை, காஞ்சிபுரம் போன்று, பிற வட்டாரங்களிலும் அரசு மருத்துவமனைகளில் புற்றுநோய்க்கான நவீன சிகிச்சை வசதிகள்**
- **தஞ்சாவூர், தருமபுரி, விழுப்புரத்தில் உயர்சிறப்பு மருத்துவமனைகள்**
- **மண்டல அளவில் கருத்தரிப்பு மையங்கள்**
- **மாவட்ட & வட்ட அளவிலான மருத்துவமனைகளில் டயாலிசிஸ் கருவிகளின் எண்ணிக்கை**




- **இருமடங்காக்கப்படும் உள்ளிட்ட பல வாக்குறுதிகளை** #StalinStatement **என வழங்கியிருக்கிறேன்!**

**நலமான தமிழ்நாடு 2030-க்கு வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது, சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிமனையினை மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கழக அமைப்பு துணைச் செயலாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி, மு. ராசா எம்.சி, காசி முத்துமாணிக்கம், வாசுகி பாண்டியன், உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன் மற்றும் தோழமை இயக்க மாவட்ட கழக செயலாளர்கள், மாவட்ட தலைவர்கள், பகுதி செயலாளர்கள், பகுதி தலைவர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.




சென்னை தென்மேற்கு வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்ட நிவாஸ் குமார் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.வை சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் மேற்குப் பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., 123வது வட்ட கழக செயலாளர் மூ.இ.ஏழுமலை, வர்த்தகர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.பாலு ஆகியோர் உள்ளனர்.